[18th April 1960

Sri A. VEDARATHNAM : இப்பொழுது வண்டல் எந்த அள வுக்கு இருக்கிறது என்பதை அரசாங்கம் அறிந்ததா?

The Hon. Sri P. KAKKAN : இதற்கு முன்பே சொன்னேன் வண்டல் எவ்வளவு இருக்கிறது என்பது தெரியாது என்று. அது அவசி யம் இல்லை. அதனால் பத்தடி உயர்த்துவதற்கு இப்பொழுது அவசியம் இல்லை என்று இஞ்சினியர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

Sri K. S. ARDHANAREESWARA GOUNDER : இதற்கு முன்பு இருந்த சூப்ரன்டெண்டிங் இஞ்சினீயர் சி. எ. பார்பர் எழுதியிருக்கிறார் ஒரு புத்தகத்தில் வண்டல் படிந்திருந்தால் அதன் காரணமாக பாசனம் பாதிக்கப்பட்டால் அணையை இன்னும் அதிகப்படியாக பத்தடி உயர்த்திக் கொள்ளலாம் என்பதை அந்தப் புத்தகத்தில் எழுதியிருக்கிறார், அதன் மூலமாக பாசன வசதியை அதிகரித்துக்கொள்ளலாம் என்று எழுதி யிருக்கிறார். அப்படி எழுதியிருப்பது சர்க்காருக்குத் தெரியுமா?

The Hon. Sri P. KAKKAN : கனம் அங்கத்தினர் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

Medical Officers

9.00 a.m. ***Q. 707—Sri V.K. KOTHANDARAMAN** : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா :

(அ) சென்னை மருத்துவப் பணியில் பணியாற்றும் மருத்துவ அதிகாரி களில் மேல் பட்டப்படிப்புத் தகுதியுடையவர்கள் மாவட்டவாரியாக எத்தனை பேர்?

(ஆ) மாவட்ட மருத்துவ அதிகாரிகளில் மேல் பட்டப்படிப்பு தகுதியுடைய யவர்கள் எத்தனை பேர்?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) The particulars required by the hon. Member are given below :—

Name of district.	Number of Medical Officers with post-graduate Qualification.
Madras City	95
North Arcot	1
South Arcot	1
Salem	1
Tiruchirappalli	1
Thanjavur	1
Madurai	21

(This does not include District Medical Officers.)

(*b*) Two (one in Coimbatore and the other in Kanyakumari.)

Sri V. K. KOTHANDARAMAN : மேல் படிப்பு படித்த மருத்துவ அதிகாரிகளை அப்படி மேற்படிப்பு படிக்காத அதிகாரிகளின் கீழ் பணி யாற்றும்படி உத்தரவு போட்டிருப்பதன் காரணமாக இவர்கள் ப்ரஸ்டிஜ் என்ற அடிப்படையில் சரியான முறையில் வேலை நடைபெறாத நிலைமை இருப்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? இதை மாற்றித் திருத்தியமைக்கத் தக்க அளவுக்கு கனம் அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா?

The Hon. Sri M. A. MANICKAVELU : அந்த மாதிரித் தகராறு ஏற்பட்டிருப்பதைக் கனம் அங்கத்தினர் அவர்கள் எவ்வாறு கண்டுபிடித்தார் கள் என்று தெரியவில்லை. மேல் படிப்பு படித்தவர்கள் ஒரு துறையில் பணியாற்றுகிறார்கள். டி.எம்.ஓ. வாக இருக்கக்கூடியவர்கள் ரொடீன் வேலை செய்கிறார்கள்.

18th April 1960]

Sri V. K. KOTHANDARAMAN : குடியாத்தம் ஆஸ்பத்திரியில் எம்.பி.,பி.எஸ். டாக்டர்களை ஜி.ஸி.ஐ.எம். படித்த ஒருவரின் கீழ் வேலை செய்யவேண்டும் என்று உத்தரவு போட்டிருப்பதன் காரணமாக அங்கே குழப்பம் ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கனம் அமைச்சர் அவர்களுக்கு எழுதியிருக்கிறேன். இதன் பேரில் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள் ? இது மாதிரி மற்ற இடங்களில் இருக்கலாம். இதை நீக்க என்ன நடவடிக்கை எடுக்கப்படும் ?

The Hon. Sri M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் குறிப்பிட்ட கடிதத்தைப் பார்க்கிறேன். அந்த ஆஸ்பத்திரிக்கு இன்-சார்ஜ் ஆக இருக்கிறவர் ஒரு டாக்டர். இதர ஸ்பெஷலிஸ்டுகள் இருக்கலாம்.

Sri M. P. SUBRAMANIAM. விசேஷ படிப்புகளுக்காக மேல் நாடுகளுக்கு குறிப்பாக அமெரிக்கா போன்ற இடங்களுக்கு அனுப்பப்பட்டு இங்கே வருகிறவர்களுடைய அனுபவம் நமக்கு பயன்படாமல் இருக்கிற நிலைமையைப் போக்க என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள் ?

The Hon. Sri M. A. MANICKAVELU : பொதுவாக அப்படிக் கேட்டால் குறிப்பாக பதில் சொல்வதற்கில்லை. ஏதாவது குறிப்பிட்ட விஷயம் பற்றிக் கேட்டால் பதில் சொல்கிறேன்.

Sri. T. S. RAMASWAMI : விசேஷ படிப்பு பெற்று வந்துள்ள ஒரு கண் வைத்திய நிபுணர் கன்னியாகுமரியில் இருக்கிறார். அங்கே போதுமான எக்யுப்மெண்டுகள் இல்லாததால் அவருடைய உயர்ந்த படிப்பு பயன்படாமல் இருக்கிறது. இப்படியில்லாது எங்கெங்கே வசதிகள் எல்லாம் இருக்கிறதோ அங்கெல்லாம் மேல் படிப்பு படித்து வந்தவர்களுடைய சேவையையும் பயன்படுத்திக் கொள்ள ஏற்பாடு செய்வார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : எந்த எந்த வகையில் எல்லாம் மேல் படிப்பு படித்தவர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாமோ அந்தஅந்த வகையில் பயன்படுத்திக்கொள்ளப்படுகிறது. கன்னியாகுமரி வேறு விஷயம். அங்கே பல துறைகளில் எக்விப்மெண்டு இல்லை. பல் வைத்தியம் என்றால் முன்பு நாற்காலியே கிடையாது. பல லட்சகணக்கில் இப்போதுதான் அது எல்லாம் ஏற்படுத்தி வருகிறோம். இந்த மாதிரி நிலைமை அந்த அரசாங்கத்தில் இருந்தது.

Sri. N. MARUDHACHALAM : மருத்துவப் பணியில் பணியாற்றுகிற தாழ்த்தப்பட்டவர்கள் எத்தனை பேர் என்பதை மாவட்டவாரியாகச் சொல்வார்களா ?

Mr. SPEAKER : இதற்கு தனியாகத்தான் கேள்வி போட வேண்டும்.

I rule this Question out of order.

Medical Graduates

*780 *Q.*—**Sri T. S. RAMASWAMI** (on behalf of **Sri K. SATTANATHA KARAYALAR**) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of vacancies that exist now in hospitals in our State for want of qualified doctors ; and

(*b*) the number of successful medical graduates during 1959 and the number absorbed in Government service ?